# “இந்தியாவின் பாரம்பரிய இசைக்கருவிகள்”

**1. புல்லாங்குழல்**

இது பழங்கால இந்தியாவின் காற்றுக்கருவி, அஜந்தா, எல்லோரா சித்திரங்கள் கூட குரலொலி தொடர்பான கருவிக்கு ஏற்றது என புல்லாங்குழலையும், பன்சுரியையும் காட்டுகிறது. பழங்காலத்தில் சிறந்து விளங்கியது புல்லாங்குழல் என்றாலும், அக்கருவி இன்றும் அதன் தன்மையில் இருந்து மாறாமல், அதே நிலையில் உள்ளது. இக்கருவி வட்டவடிவிலான மூங்கில் குழலால் அமைந்தது. தன் ஆறு துவாரங்கள் விரல்களை இசைக்கேற்ற வண்ணம் நகர்த்தவும், மேலும் ஒரு பெரிய துவாரம் காற்றை உள்ளனுப்பவும் கொண்டுள்ளது. இது சாய்வான முறையில் கையாளப்பட்டு மேல் உதட்டின் உதவி மூலம் பெரிய துவாரத்தில் காற்று ஊதி இசைக்கின்றனர். விரல்களையும் பயன்படுத்தி பலவிதமான சுவரங்ளை ஏற்படுத்த இக்கருவி பயன்படுகிறது.

**2. கடம்**

கடம் என்பது பண்டைகாலத்தில் பழக்கத்திலிருந்த தட்டுதல் மூலம் ஒலியெழுப்பக்கூடிய ஒரு கருவி. இது கர்நாடக இசைக் கச்சேரிகளில் மிகவும் பிரபலமானது. இக்கருவி, மண்ணால் பிசையப்பட்டு, அழகிய வடிவத்தில் வடிவமைக்கப்படுகிறது. இக்கருவியின் வாய் திறந்தே இருக்கும். இதனை கரங்களாலும், மணிக்கட்டின் மூலமாகவும், விரல் மற்றும் நகங்கள் கொண்டும் இசைக்கலாம். இக்கருவியின் வாய் இசைக்கின்றவரின் வயிற்றோடு ஒட்டி வைத்துக்கொள்ளப்படும். ஏனெனில், பானையில் அடித்தவுடன் ஏற்படும் அதிர்வும் பானையின் உள்ளே உள்ள காற்று அதிர்வுகளை ஏற்படுத்தி இசையை ஏற்படுத்துகிறது. இசைப்பவர், இசைக்கருவியில் வலப்பகுதிகளில் அடிப்பதால், பலவிதமான ஒலிகளை ஏற்படுத்துகிறது.

**3. ஜலதரங்கம்**

இதற்கு ‘நிரலை’ என்று அர்த்தம். இக்கருவி பதினெட்டு பீங்கான் பாண்டங்களால், விதவிதமான வடிவங்களில், விதவிதமான சுவரங்களை உருவாக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. பீங்கான் பாண்டங்கள் இசையமைப்பவரின் இடதுபக்கத்தில் இருந்து பெரியது முதல் சிறியதாக வைக்கப்படும். பெரிய பாண்டங்கள் ஆழமான தொனியையும், சிறிய பாண்டங்கள் அதைவிட சிறிய தொனியையும் உண்டாக்கும். அனைத்து பீங்கான் பாண்டங்களிலும் நீர் நிரபப்பப்பட்டு, அதன் விளிம்பில் இரண்டு மெல்லிய குச்சிகளை கைகளில் கொண்டு அடித்து இசையெழுப்பப்படும், அதிக

நீரினைக் கொண்டிருந்தால் குறைந்த தொனியை ஏற்படுத்தும். எனவே ஸ்ருதியை கூட்டுவதற்கு நீண்ட நேரத்தை எடுத்துக்கொள்கிறது.

## 4. மிருதங்கம்

மிருதங்கம் என்பது மிகச்சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பண்டை காலத்து தட்டுதல் மூலம் ஒலியெழுப்பக்க கூடிய கருவி. இக்கருவி பொதுவாகத் தென்னகத்தில் பயன்படுத்தப்படும் குரல் சம்பந்தமான கருவி. மிருதங்கம் என்பதற்கு ‘களிமண் உடல்’ என்ற அர்ததம். பொதுவாக தென்னகத்து மிருதங்கம் பெரும்பாலும் மரத்துண்டைக் கொண்டு வட்டவடிமாக உட்குழியாய் அமைக்கப்படும். இதின் திறந்த பகுதி தோலினைக் கொண்டு மூடப்படும். உறுதியாய் கட்டப்படும் நீண்ட பலவிதமான ஒலிகளை இக்கருவி பல பாகங்களில் தட்டுதல் மூலம் பெறலாம. உதாரணமாக மிருதங்கத்தின் தலைப் பகுதியை முழு கரத்தினைக் கொண்டோ அல்லது விரல்களைக் கொண்டோ தட்டலாம். அடிகளின் விதத்தை விரிவான தட்டுதல் மூலம் அறியலாம் இரண்டு தலைகளிலும் தட்டுதல் மூலம் ஏற்படும் மாறுதல் ஒலியாக அதிகரிக்கும்.

## 5. நாதஸ்வரம்

நாதஸ்வரம் 15, 16 நூற்றாண்டில் சிறந்து விளங்கியது. இது மரத்தினாலான வாய்ப்பகுதியைக் கொண்டுள்ளது. அழுத்தத்தின் மூலம் ஏற்படும் இக்காற்று, இரண்டு மூங்கில் குழல் மூலமாகவோ, இரும்புக் குழல் மூலமாகவோ வெளியாகிறது. இக்குழல்கள், மடிப்புக் கதவுகளைக் கொண்டுள்ளது. இது உள்ளே வரும் காற்றுகளை தேவையான அளவு தடுத்து ஒலி எழுப்புகிறது. மேலும் இதில் உள்ள துவாரங்கள் மெல்லிசை ஏற்படுத்துகிறது. நாதஸ்வரம் மேலும் அழகிய தோற்றத்தையும், மிருதுவான தோற்றத்தையும் கொண்டு கர்நாடக இசையில் வசீகரமான அழகைக் கூட்டுகிறது.

## 6. பக்கவாத்தியம்

இதற்கு வடநாட்டில் பக்வாஜ் என்று பெயர் இது வடநாட்டில் மிகவும் பிரபலம். இது மிருதங்கத்தை போல் என்றாலும், அது அமைந்த விதமும், இசைக்கப்படும் முறையும் மட்டுமே வித்தியாசம். இதன் இடது பக்கம் மிருதங்கத்தினைப் போல் என்றாலும், வலது பக்கம் சீரிய மாறுதல்களைக் கொண்டுள்ளது. இதில் உள்ள வித்தியாசம் என்னவெனில் பக்வாஜ் கருவியை இடது கை கொண்டு இசைப்பர். ஆனால் தென்னகத்து இசைவல்லுநர்கள் இடதுபக்கத்தை தபேலாவை இசைப்பது போல் இசைப்பர்.

**7.சந்தூர்**

இவ்வகை இசைக்கருவிகள் காஷ்மீர் பள்ளத்தாக்கு விசேஷமான வேத வன வீணா மூலம் அறிமுகமானது. இவ்வகை கருவிகள் வேறு எங்கும் காண முடியாது. வன வீணா நரம்புகளால் ஆன கருவி இதனை குச்சிகளைக் கொண்டு இசைக்க வேண்டும். இன்றையச் சந்தூர் சரிவக வடிவிலான மரப்பெட்டியாக வடிவமைக்கப்படுகிறது. இவை 30 இணைப்பும், எட்டு இரும்பு நரம்புகளும் கொண்டது. இவையனைத்தும் ஒவ்வொரு இணைப்புகளுடன் இணைக்கப்படும். இவ்வகை கருவிகள் இரண்டு தட்டையான மரக் குச்சிகள் கொண்டு இசைக்கப்படும். அடிக்கப்படும் நுனி கல் வளைவாக இருக்கும். இன்று சந்தூர் இந்தியாவின் எல்லா ராகங்களிலும் இசைக்கப்படுகிறது.

**8. சாரங்கி**

சாரங்கி என்பது நரம்பினால் ஆன இசைக்கருவி இது மரபு சார்ந்த கருவி. இவ்வகைக் கருவிகள் ஏற்படுத்தும் பலவகையான ஒலியலைகள் இந்துஸ்தானி தனிச்சிறப்பு இசையில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இக்கருவி ஒரு மரத்தடுப்பால் வெளியில் உட்குழியான தோற்றத்தோடு நான்கு நரம்புகளையும் கொண்டுள்ளது. இக்கருவி உட்குழியான தலைப்பகுதியில் நான்கு ஒலிகூட்டும் முறைகளைக் கொண்டுள்ளது. இது மறைந்திருக்கும் நடுப்பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும். இசைக்கலைஞர் இதனை தன் மடியில் வைத்தும், குதிரை மயிரால் ஆன வளைத்த கருவியை வலது கையாலும், இடது கையின் விரல்களையும், நகங்கள் வைத்தும் இசைப்பார். சாரங்கியின் ஒலி மனித குரலொலியுடன் ஒத்துள்ளது.

**9. சாரட்**

சாரட் இசைக்கருவி தோன்றிய முறை தெரியவில்லை என்றாலும் இக்கருவி உத்தேசமாக மத்திய கிழக்கின் மரபு வழியாக வந்திருக்கக்கூடும். மேலும் பலா் இவ்வகைக் கருவிகள் கிரேக்க புத்த பகுதியான காந்தர் என்ற இடத்தில் துவங்கியிருக்கக் கூடும் என்கின்றனர். இன்றைய சாரட் மரத்தினாலானது. ஒரு பகுதி உருண்டையாகவும், தோல் காகிதத்தினால் மூடப்பட்டதாகவும் உள்ளது. இக்கருவிகளின் கழுத்துப் பகுதியில் உள்ள முளைகளில் ஆறு முக்கிய உலோக நரம்புகள் இணைக்கப்பட்டிருக்கும். இக்கருவிகள் நரம்பியக்கி மூலம் இசைக்கப்படும். சாரட் இந்துஸ்தானிய சிறப்பு இசைகளில் தன் ஆழமான மற்றும் உயர்ந்த குரல் மூலமாகவும் தனிப்பட்ட ஒலியாலும் இடம் பெற்றுள்ளது.

**10. சிங்கினி**

இவ்வகை கருவி அநுகூலமாக கருதப்படுகிறது. மேலும் இவை காற்றலைகளால் ஏற்படும் இசைகருவிகளுடன் சார்ந்தது. இக்கருவி பெர்சியாவில் தோன்றியது. இக்கருவி ஆறு துளைகளால் ஆன ஒரு ஊது குழல் கருவி. இது மென்மையான மற்றும் இன்னிசையையும் எழுப்புகிறது. இக்கருவி அடர்த்தியான வரியமைப்புக் கொண்ட மரத்துண்டால் ஆனது. இதில் உள்ள மேல் குழாய் நேராகவும், கீழ்பகுதியில் உள்ள குழாய் சற்று விரிந்தும் காணப்படும். மூச்சு கட்டுப்பாடு மூலமாக முழு குரல், அரை குரல் மற்றும் நுண்ணிய ஸ்ருதி கட்டைகளை இசைக்கலாம்.

## 11.சிதார்

சிதார் வடஇந்திய கர்நாடக இசையில் மிகவும் பிரபலம் வாய்ந்தது. கடந்த 200 ஆண்டுகளாக இன்றும் பழக்கத்தில் உள்ளது. சிதாரின் கண்டுபிடிப்பு, டில்லியின் சுல்தானிய (1296-1316) அலா-தின்-கில்ஜியின் அவையில் பெர்சிய மற்றும் இந்திய இசையில் சிறந்து விளங்கி பெருமதிப்பு பெற்ற பெர்சிய இசைமேதையான அமீர் குஸ்ராவுடன் குறிக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல. உண்மையான நிகழ்வு வட இந்திய சிதார் பெரும்பாலும் பல கலாச்சாரங்களில் வந்துள்ளது. இன்றைய சிதாரின் வடிவமைப்பு, இந்தியாவில் மிகவும் பழமை வாய்ந்த நரம்புக் கருவியான வீணையினை அடையாளம் காட்டுகிறது. முகமதிய சிதார் என்பதை மூன்று அல்லது ஏழு நரம்புகள் கொண்டது.

## 12. தபேலா

தபேலா என்பது தட்டுதல் மூலம் ஒலியெழுப்பக் கூடிய பண்டைக்காலக் கருவி. இதனை அமீர் குஸ்ரா என்பவர் சிவனின் கையில் உள்ள உடுக்கை என்று நம்புகிறார். அது அரேபிய முரசு என்று அழைக்கப்படும் டேபிள் மூலம் மறுவி வந்தது தான் தபேலா. தபேலா இரண்டு முரசுகளைக் கொண்டது. வலது பக்கம் கரும்பலகையிலும், இடதுபக்கம் களிமண் அல்லது செம்பினால் ஆனது. இரண்டு பக்கங்களும் உட்குழியாய் அமைந்திருக்கும் இவை தோல்வாரினால் முரசுகளின் உடல்பகுதியில் மிக இறுக்கமாய் கட்டப்படும். இவ்விரண்டு தபேலா பாகங்களும் பலவித சுவரங்களை ஏற்படுத்தக் கூடியது. இசை வல்லுநர் தபேலாவில் பலவித தாளங்களை ஏற்படுத்தக்கூடியவர்.

## 13. வீணை

தென்னக வீணை தஞ்சாவூரை ஆண்ட ரகுநாத நாயக்கரால் உபயோகத்தில் கொண்டுவரப்பட்டது. இது இருபத்தி நான்கு மரசித்தர வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இது மரத்தினால் ஆனது. வெளியில் உட்குழியாய் அமைக்கப்படும். இதன் கழுத்துப் பகுதி மாயசக்கியுள்ள பறக்கும் நாகத்தின் தலையை போல் உள்ள தண்டினால் தலைபகுதியில் பொருத்தப்படும். இதில் ஏழு நரம்புகள் உள்ளது. வடநாட்டின் விசித்திர வீணை

என்பது, மிகவும் அரிதானது. இதனை இந்தூரின் அவை இசைக்கலைஞரான உஸ்தாத் அப்துல் அஜிஜ் கான் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்போது தோன்றியது தான். இதற்கு அகலமான தண்டு உள்ளது. மேலும் ஆறு நரம்புகளும் ஒரு முனையில் இருந்து மறு முனைக்கு இணைக்கப்பட்டிருக்கும். வலது கை விரலால் இசை மீட்கும் கருவி கொண்டு இசைக்கப்படும்.

## 14. பிடில் (வயலின்)

இந்திய கர்நாடக இசைகள் வெவ்வேறான வில்போன்ற நரம்பு இசைக்கருவிகளைக் கொண்டிருந்தாலும், பிடில் அறிமுகமானது தற்போது தான். மேற்கத்திய இசைக்கருவிகளில் பிடில் தான் மற்றைய கருவிகளைவிட இந்திய இசையில் அப்படியே உட்கிரகிக்கப்பட்ட கருவி. இந்திய கர்நாடக இசையை முன்னேற்றுவதற்காக ஒரு நூற்றாண்டு முந்தைய நாட்களில் தஞ்சாவூரை ஆண்ட மராத்தாவை சார்ந்த வரகப்பையா என்பவர் கண்டறிந்தார். இந்தியாவின் பிடில் நரம்புகளில் மேற்கத்திய பாணியை விட பல ஸ்ருதி கட்டைகளை வாசிக்க முடிகிறது. மெல்லிய குரல், நரம்பு மூலம் ஏற்படுகிறது. நான்காம் நரம்பு கர்நாடக இசையின் விசேஷத்தன்மையை மேலும் அழகுபடுத்துகிறது.